**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

04.07.2025

O.S. No. 329/2022

D.W.1 திரு. சிதம்பரநாதன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

வாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவர் என்னிடம் பணம் வாங்கியபோது பதிவாளர் அலுவலகம் சென்றபோது தெரியும். வாதிக்கும், எனக்கும் நீண்ட காலம் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தை நான் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விவரத்தை தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த அடமான பத்திரத்தில் நான் வாங்கிய தொகைக்கு உரிய வட்டி செலுத்த வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ரூபாய் 12,00,000/- தான் வாங்கினேன், அதற்கு வட்டியாக ரூபாய் 3,00,000/- சேர்த்து ரூபாய் 15,00,000/- த்திற்கு அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்டது. வட்டி ஒரு பெயருக்குதான் எழுதப்பட்டுள்ளதாக வாதி கூறினார். ரூபாய் 12,00,000/- அசல் பணமும், ரூபாய் 3,00,000/- வட்டி பணமும் என்று வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை, அது வாய்மொழியாகதான் சொல்லப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு ஆங்கில மாதம் 5 ஆம்

தேதிக்குள் வட்டி தர வேண்டும் என வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் ரூபாய் 15,00,000/- எனவும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ரூபாய் 9,50,000/- தான் வாதிக்கு திருப்பி தந்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு நான் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் எழுதி வாங்கியுள்ளேன். அந்த பணப்பற்று ரசீதில் அந்த தொகை வட்டிக்காக அல்லது முழுத் தொகைக்காக என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் வட்டியும், முதலும் என சேர்த்து சொல்லப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ. 2 பணப்பற்று ரசீதில் ரூபாய் 15,00,000/- த்தில் பகுதி தொகையாக ரூபாய் 5,00,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 பணப்பற்று ரசீதில் பாக்கி தொகை ரூபாய் 9,25,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ஆங்கிலம் எனக்கு சரியாக தொியாது. அந்த பணப்பற்று ரசீதில் ரூபாய் 75,000/- நான் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பி.வா.சா.ஆ. 4 ல் நான் ரூபாய் 25,000/- செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5, 6, 7, 8 ஆகிய ஆவணங்களில் நான் கொடுத்த தொகைக்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒட்டு மொத்தமாக ரூபாய் 9,50,000/- த்தை பெற்று கொண்டு அதற்கு வாதி ரசீது கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதிக்கு நான் வழக்குரையில் சொல்லியுள்ள கணக்குப்பட்டியலில் கூறியுள்ளது போல ரூபாய் 17,03,724/- நான் கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரியல்ல.

வாதியிடம் நான் பணம் பெற்று கொள்ளும்போது ரூபாய் 15,00,000/- யும் அதற்கான வட்டி தொகையும் செலுத்த ஒப்பு கொண்டு வா.சா.ஆ. 1 அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது, ஆனால் ரூபாய் 12,00,000/- யும், அதற்கான வட்டியாக ரூபாய் 3,00,000/- யும் தருவதாகதான் உண்மையில் வாய்மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ரூபாய் 3,00,000/- வட்டி என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.